KAYALPATTINAM MUNICIPALITY

FORM 3

Minutes of the Meeting held on 19.11.2010

| Date of the Council Meeting | Decision Number | Subject of the Agenda | Decision of the Council |
|---|---|---|---|
| 19.11.2010 | 793 | **பொருள் எண்: 1**<br>காயல்பட்டிணம் நகராட்சியில் சிறப்பு சாலை திட்டத்தின் கீழ் (2010–11)–ம் ஆண்டு சிமெண்ட் சாலைகள் அமைப்பதற்கு 01.11.2010 அன்று ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப் புள்ளிகள் மன்றத்தின் பரிசீலனைக்கு. | அங்கீகரிக்கப்பட்டது |

| சிப் பம் (Package) | வேலையின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி கேட்பு தொகை | விலை விகிதம் மதிப்பீடு ரேட்டிற்கு | சம்மத கடிதத்தில் (Negotiation) தெரிவித்துள்ள விலை விகிதம் |
|---|---|---|---|---|---|
| I | **1)** கீழநெய்னார் தெரு,<br>**2)** சித்தன் தெரு முதல் நெய்னார் தெரு வரை,(வழி–சிறுபள்ளி)<br>**3)**விசாலாட்சிஅம்மன் கோவில் தெரு எதிர் (தெற்கு பகுதி),<br>**4)** காயிதே மில்லத் நகர் மெயின் ரோடு,<br>**5)** மேலநெசவுத் தெரு முதல் வாணியகுடி தெரு வரை,<br>**6)** பிரின்ஸ் தெரு<br>**7)** பைபாஸ் தெரு முதல் சிவன் கோவில் தெரு வரை (வழி அரசு மருத்துவமனை) முதலான தெருக்களில் சிமெண்ட் தளம் | 1) திரு R.தலவாணிமுத்து<br>38 பூந்தோட்டம்<br>காயல்பட்டிணம்<br><br>2) திரு S.ரம்போலா<br>**179** குருஸ்புரம்<br>தூத்துக்குடி–**1.** | 94.86 | –<br><br>4.47% அதிகம் | –<br><br>4.00% அதிகம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | அமைத்தல். | | | | | |
| II | **1)** இரத்தினாபுரி கிழக்கு தெரு தொலைபேசி நிலையத்திலிருந்து<br>**2)** சதுக்கை தெரு முதல் வடக்கு முத்தாரம்மன் கோவில் தெரு வரை (வழி ஜலாலியா மஹால்),<br>**3)** புதுக்கடை தெரு,<br>**4)** வடக்கு முத்தாரம்மன் கோவில் தெரு முதல் கோமான்புதூர் வரை,<br>**5)** சீதக்காதி நகர்<br>**6)** அலியார் தெரு முதலான தெருக்களில் சிமெண்ட் தளம் அமைத்தல். | 1) திரு S.ரம்போலா<br>**179** குருஸ்புரம்<br>தூத்துக்குடி–**1.**<br><br>**2)** திரு S.சுதர்சன்<br>**161**C/1 குருஸ்புரம்<br>தூத்துக்குடி–**1.** | 94.20 | 4.50%<br>அதிகம்<br><br>5.74%<br>அதிகம் | | 4.00%<br>அதிகம்<br><br>5.00%<br>அதிகம் |

**<u>அலுவலக குறிப்பு:</u>**

(அ) சிறப்பு சாலை திட்டத்தின் கீழ் ரூ.200 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் செய்வதற்கு மன்றம் தனது தீர்மான எண்: 793 நாள்: 20.10.2010ல் ரூ.200 இலட்சத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது.

(ஆ) **சிப்பம் எண் I** -க்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் திரு R.தலவாணிமுத்து, 38 பூந்தோட்டம், காயல்பட்டிணம் என்பவர் கீழ்க்கண்டுள்ள காரணங்களுக்காக தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி போட்டியிலிருந்து தகுதி நீக்கம் செய்யப்படுகின்றார்.

(1) திரு R.தலவாணிமுத்து என்பவர் ஒப்பந்ததாரர் வகுப்பு–II என்பதற்கான சான்றிதழை நாளது தேதிக்கு புதுப்பிக்கவில்லை.

(2) தணிக்கை சான்றிதழ்களை கடந்த ஐந்து வருடங்களுக்கு (2006–07 to 2009–10) முழுமையாக சமர்ப்பிக்கவில்லை.

(3) சான்றிதழ் அனைத்துக்கும் முழுமையாக நோட்டரி பப்ளிக்–ன் சான்றொப்பம் பெறப்படவில்லை.

(4) அன்னாரிடம் உள்ள தளவாட கருவிகள் மற்றும் சாமான்கள் விபரத்திற்கு முழுமையாக சான்றொப்பம் செய்து தரப்படவில்லை.

எனவே **சிப்பம் எண் I-** க்கு தொழில்நுட்ப ஒப்பந்தப் புள்ளியில் தகுதி வாய்ந்த திரு S.ரம்போலா, 179 குரூஸ்புரம், தூத்துக்குடி என்பவரது ஒப்பந்தப்புள்ளி மதிப்பீடு விகிதத்திற்கு 4.00% (After Negotiation Rate)அதிகமாக உள்ளது. நடப்பு மார்க்கெட் ரேட்டினை (Local Market Rate) கருத்தில் கொண்டு திரு S.ரம்போலா என்பவரது ஒப்பந்தப் புள்ளியினை (மதிப்பீடு ரேட்டிற்கு 4.00% அதிகம்) மன்றம் ஏற்றுக் கொள்ள அனுமதிக்கலாம்.

(இ) **சிப்பம் எண் II–**க்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப் புள்ளி கொடுத்துள்ள திரு S.ரம்போலா, 179 குரூஸ்புரம், தூத்துக்குடி. என்பவரது ஒப்பந்தப் புள்ளி மதிப்பீடு ரேட்டிற்கு 4.00% அதிகமாக (After Negotiation Rate) உள்ளது. தமிழக அரசின் சிறப்பு சாலை திட்டப் பணியாக இப்பணிகள் இருப்பதாலும், குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் மேற்படி பணிகளை முடிக்க வேண்டியிருப்பதாலும் சிப்பம் II-க்கு வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு S.ரம்போலா என்பவரது ஒப்பந்தப் புள்ளியினை (மதிப்பீடு ரேட்டிற்கு 4.00% அதிகம்) மன்றம் ஏற்றுக்கொள்ள அனுமதிக்கலாம்.

(ஈ) அரசு நிநி ஒதுக்கீடு போக கூடுதலாகும் செலவினத் தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து ஈடு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 793**

இந்நகராட்சியின் 1–வது வார்டு நகர்மன்ற உறுப்பினரை தவிர்த்து நகர்மன்ற தலைவர், துணைத் தலைவர் மற்றும் அனைத்து உறுப்பினர்களும் சிறப்புச் சாலை திட்டப் பணியினை செய்திடவும் இரண்டு சிப்பப பணிகளுக்கும் வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள (மதிப்பீட்டு ரேட்டிற்கு 4.00% அதிகம்) திரு.S. ரம்போலா, 179 குரூஸ்புரம், தூத்துக்குடி–1 என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கப்பட்டது மேலும் அரசு நிதி போக கூடுதலாகும் செலவினத்தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து ஈடு செய்திடவும் அங்கீகரிக்கப்பட்டது